## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லங்கா கவர்ன்மென்ட் இன்போர்மேசன் இன்பிராஸ்ட்ரக்சர் (பிறைவேட்) லிமிட்டெட்டின் ''கம்பனி'' 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 264,680 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ரூபா 39,702 கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. மேலும் | திசெம்பர் மாதத்திற்கான EPF மற்றும் ETF கொடுப்பனவுகள் தொடர்பாக நிதியம் தற்போதும் SSP நிறுவனத்திற்கு மாற்றப்பட்டிருந்தமையால் அவை செலுத்த வேண்டியதாக எங்களால் கணக்கீடு செய்யப்படாதிருந்தமை தெளிவாகும். சரியாக வெளியிடும் போது பெயர், திசெம்பர் மாதத்திற்கான | கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய யாவும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சம்பளம் தயாரிக்கும் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 304,382 கடன்பட்டோர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | EPF மற்றும் ETF தொழில்நுட்ப ரீதியாக செலுத்த வேண்டிய நபர்களுக்கு கண்டிப்பாக விவாதிக்க முடியாதிருந்ததுடன் SSP இற்கு மாற்றப்பட்ட தொகை திசெம்பர் மாதத்தின் இறுதியில் கிடைக்க வேண்டியதாக கவனத்திற் கொள்ள முடியும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளைத் தடுப்பதற்காக நிதியம் மாற்றப்பட்ட மாத்திலேயே EPF மற்றும் ETF கொடுப்பனவுகள் செயற்பாடுகளாக தற்போது SSP நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.3 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தாய்க் கம்பனி ICTA (இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப முகராண்மை) தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது கம்பனிச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் ICTA நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஐந்தொகை திகதி மற்றும் நிதிக்கூற்றுக்களை விநியோகிப்பதற்கு அங்கீகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள திகதிகளுக்கிடையே அதாவது 2022 திசெம்பர் 15 ஆம் திகதி LKAS- 10 இன் பிரகாரம் ஒன்றிணைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கையிடல் கால எல்லையின் பின்னர் ஏற்பட்ட நிலைமையுடன் நடவடிக்கை எடுக்கின்றமையினால் வெளிப்படுத்த வேண்டியவைகள் சீராக்கப்படாதிருந்தது. அதனால் LKAS- 10 இன் பிரகாரம் தேவையான பிரகாரம் இந்த சீராக்கம் இன்றி வெளிப்படுத்துவதற்கு தவறியிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். | ஐந்தொகை திகதியின் பின்னர் சகல சம்பவங்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு தாய்க் கம்பனியில் இருந்து (இலங்கை தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகராண்மை) கிடைக்கவேண்டிய மீதி ரூபா 44,001,286 ஆக இருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ICTA மற்றும் LGII நிறுவனத்தை ஒன்றிணைப்பதன் ஊடாக இந்த உள்ளக கம்பனியின் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது தற்போது செயற்படுத்தப்படுகின்றது. | கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | கலண்டர் ஆண்டின் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை பங்கு உரிமையாளர்களின் வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். கம்பனி ஆரம்பித்ததில் இருந்து வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தாமதத்தின் காரணமாக வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) நடாத்துதல் தாமதமாகி இருந்தது. மேலும் சமர்ப்பிக்காத கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றமையால் அதனையும் பூர்த்தி செய்து கம்பனிச் சட்டத்தின் மூலம் குறித்துரைத்த பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டத்தை (AGM) நடாத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைந்நூல் 6.6 ஆம் பிரிவு. | நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் (60) வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்க வேண்டி இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 425 நாட்களின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தாமதம் ஏற்பட்டிருந்தமை எங்களால் ஏற்றுக்கொள்கின்றோம். 2016 ஆம் ஆண்டு முதல் தவறினால் பணிகளை பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது. எனினும் தற்போது 2021 இன் நிதிக்கூற்றுக்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் வரைவு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. எங்களால் எதிர்காலத்தின் போது அரசாங்கத்தின் நாட்காட்டிகளுடன் நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்துகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையைப் பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் அத்தியாயம் 05 | 2021 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்துவதற்கு குறித்துரைத்த கம்பனியின் ஒன்றிணைந்த திட்டம் மற்றும் வணிக செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கை திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | LGII நிறுவனத்தின் 2021 இன் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் ICTA நிறுவனத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது ICTA நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட டிஜிட்டல் உபாய வழிகள் மூலம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்ற இரண்டும் LGII கம்பனியின் விசேஷட தன்மையினை உள்ளடக்கிய டிஜிட்டல் சேவையை உபாய வழி மூலம் LGII கம்பனியின் வேலை விடயப் பரப்பில் விபரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். நிறுவனத்தின் திட்டம் தனித்தனியாக இனங்காணக்கூடியதாக இருத்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/12 | | | |
| | அத்தியாயம் 5.2.5 | கம்பனி 2021 ஆம் ஆண்டிற்காக பாதீட்டைத் தயாரித்திருக்க வில்லை. | LGII கம்பனி ICTA நிறுவனத்தின் முழுமையாக இணைக்கப்பட்ட நிறுவனமாக இருந்ததுடன் LGII கம்பனி அறிக்கைகள் இன்றி ICTA நிறுவனத்தின் கீழ் பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம், வருடாந்த பாதீடு மற்றும் பெறுகைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பின்பற்றப்படல் வேண்டும். பாதீடு தனித் தனியாக இனங்காணப்படல் வேண்டும். |
| | அத்தியாயம் 9.2(ஆ) | கம்பனிக்காக நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்படவில்லை. | ICTA நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட டிஜிட்டல் உபாயவழியை எதிர்கால வழிநடத்தல் LGII கம்பனியின் விசேஷ பங்கினை உள்ளடக்கி டிஜிட்டல் சேவை உபாய வழிகள் மூலம் ICTA | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். நிறுவனக் கட்டமைப்பு தனித்தனியாக இனங்காணப்ப |

| | | |
|---|---|---|
| | கம்பனியின் வேலை விடயப்பரப்பில் விபரிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குபடுத்தலாக LGII கம்பனி டிஜிட்டல் சேவை ஊடகத்தின் கீழ் LGII நிறுவனத் திட்டத்தின் ஒரு பகுதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | டல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,041,493 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,480,734 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 560,759 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக ரூபா 884,653 ஆன சொத்துக்கள் அகற்றப்பட்டமையால் ஏற்பட்ட நட்டம் காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் இலக்கம் 0072839158 என்ற வங்கிக் கணக்கில் வங்கி மீதி ரூபா 350,742 தொகை 2021 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | LGII கம்பனி கணக்கு இலக்கம் 0072839158 இல் உள்ள ரூபா 350,742 மீதி LGII கம்பனிக்கு கிடைக்கின்ற அடிப்படைச் சேவை வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. LGII கம்பனியின் செயற்பாடுகள் செயற்படு நிலையில் இல்லாமையின் காரணமாக இந்த மீதி மாற்ற முடியாதிருந்தது. எனினும் அண்மைக் காலத்தில் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதுடன் இந்த பணத்தை நடைமுறைக் கணக்கில் வைக்காமல் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நாங்கள் உறுதி கூறுகின்றோம். | நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.2 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி ரூபா 3,261,272 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் இலங்கை இராணுவத்திற்கும் (ARMY) மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப அமைச்சிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். | நிலையான சொத்துக்களைக் கையளிப்பதற்கு முன் தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |